## தலைப்பு 196 – விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளதுஇ மேலும், அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைகளுக்குப் புறம்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பு 6 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மொத்த தேறிய நிதிஏற்பாடு திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 610,970,200 ஆக இருந்ததுடன் அது கணக்குகளின் பிரகாரம் ரூபா 598,167,200 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் வேறுபாடான ரூபா 12,803,000 தொகை, கணக்கின் பிரகாரம் குறிப்பு இலக்கம் 9 இன் கீழ் ஏனைய மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிதிச்செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்ட இலக்கம் 12 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள மூலதன மாற்றங்களில் உள்ளபடியான | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 1,057,920,174 ஆக இருந்ததுடன் அது கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,096,522,319 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 38,602,145 தொகையான வேறுபாட்டிற்கு காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பு இலக்கம் 15 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய மூலதனச் செலவினங்களுக்காக உள்ளபடியான பெறுமதி திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 405,832,120 ஆக இருந்ததுடன் அது கணக்குகளின் பிரகாரம் ரூபா 367,229,974 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வேறுபாடான ரூபா 38,602,145 தொகைக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பு இலக்கம் 9 இன் கீழ் சிங்களப் பிரியில் தேறிய நிதிஏற்பாடாக ரூபா 12,803,000 தொகை காண்பிக்கப்பட்டதுடன், ஆங்கிலப் பிரதியில் அப்பெறுமதி காண்பிக்கப்படாமையினால் சிங்களப் பிரதிக்கும் ஆங்கிலப் பிரதிக்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 நிதிநிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்தான 45 மோட்டார் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 394,005,500 பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் ACA 6 படிவத்தில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய படிவத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்களின் பெறுமதியான ரூபா 11.551,316 தொகை நிதிநிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 267 விதாதா நிலையங்களுக்காக பிரதேச செயலகங்கள் ஊடாக கொள்வனவுகள் செய்யப்பட்டதுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 33,001,339 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளுக்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களும் இனங்கண்டு கணக்கு வைக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 முற்பணக் கணக்கு மீதி**

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியிலான மீதிகள் கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 336,799 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த கடன் மீதியில் 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரையிலான வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | 2016 யூன் 15 ஆந் திகதி சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணமடைந்த நபரிடமிருந்து அறவிட வேண்டிய | - மேற்படி - | - மேற்படி - |

ரூபா 98,154 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்து பதிவேடு | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு உரிய பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணிச் செல்லப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை |
| (ஆ) | கணினி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு நாயதுவரையாகப் பேணப்படவில்லை. | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை |

| | | |
|---|---|---|
| (இ) பிணைப் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை |
| (ஈ) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாயதுவரையாக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் நாள்தோறும் பரீட்சிக்கப்படக் கூடிய வகையில் பொறுப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை |

### 1.6.5 கணக்காய்விற்கான சான்றுகள் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட 1 கணக்காய்வு ஐயவினாவிற்கும் உரியதாக 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டில் குறித்த காலத்தின் பின்னர் பரீட்சித்து பெறப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதிலளிப்பதற்கு தாமதமாகும் ஐயவினாக்கள் அதாவது அதற்காக இடைக்கால அறிக்கையொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

### 1.6.6 அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் அதிகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் முன்னால் இராஜாங்க அமைச்சரின் பொறுப்பில் உள்ள WPPH-0153 மற்றும் WPPH-4650 என்ற 02 வாகனங்கள் மீண்டும் அமைச்சுக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த வாகனங்களை முறையான பிரகாரம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய விஞ்ஞான நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து ஒதுக்கப்பட்ட காணிக்காக கொடுப்பனவு செய்வதற்கு திறைசேரியில் இருந்து நிதி கிடைக்காமையினால் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளை ஆரம்பித்தல் தாமதமாகி இருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதுடன் நிதியத்தைப் பெற்றுக் கொள்ளுதல் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். | தேசிய விஞ்ஞான நிலையத்தை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து அமுல்படுத்தப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு பெற்றோலிய உற்பத்தி பரிசோதனைக்காக வசதிகளை வழங்குவதற்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும், ரூபா 05 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. திறைசேரியினால் கட்டுநிதி விநியோகிக்கப்படாமையினால் | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

இந்த செயல்திட்டத்தை ஆரம்பிக்க முடியாதிருந்தது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(II) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படுதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 11 செலவின விடயங்களுக்கான ரூபா 625,700,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | விசேட செயற்திட்ட அமைச்சின் சொத்துக்கள் இந்த அமைச்சுக்கு கையேற்கப்படுவதுடன் ஏற்கப்பட்ட சொத்துக்கள் மிகையாக இருந்தமை, பெறுகை குழு அங்கத்தவர்கள் மாற்றப்பட்டமையால் பெறுகை செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டமை மற்றும் அமைச்சு திருத்தத்திற்கு உட்பட்டமையினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 20 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 50 சதவீதத்தை விட கூடுதலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | செலவின விடயங்கள் அனேகமானவைகளுக்காக செலவினங்களைச் செய்வதற்கு திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்காமையினால் ரூபா 256,121,352 தொகையான உறுதிச்சீட்டுக்கள் கொடுப்பனவு செய்யப்பட முடியாமல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி தீர்க்கும் போது சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிநிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் - குறிப்பு iv இன் கீழ் செலவினங்கள் உள்ளடக்கப்படவில்லை. | நிதிநிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் - குறிப்பு iv இன் கீழ் செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பொறுப்புக்களின் குறிப்பு (iv) இன் கீழ் காண்பிக்கப்படும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வேறுமுறையில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தவிர, வருடாந்த மதிப்பீடுகளில் அதற்காக நிதிஏற்பாடு உள்ளதாயின் தவிர எந்த ஒரு திணைக்களத்திற்கோ அல்லது அமைச்சின் வேலைக்காகவோ அல்லது சேவையினை வழங்குவதற்காகவோ எந்தவொரு செலவினங்களுக்கு அல்லது கடப்பாட்டிற்கோ கட்டுப்பட முடியாதிருந்ததுடன் அதற்காக ஏற்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவின அளவுகள் எதற்கும் நிதியாண்டிற்கான நிதிஏற்பாட்டை விஞ்ச முடியாது. (வழங்கல் சேவை தொடர்பாக இல்லாதவிடத்து) எனினும் 04 செலவின விடயங்களுக்குரிய ரூபா 234,983 இனால் நிதிஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் 94(1) இன் பிரகாரம் தொடர்ச்சியாக பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதிருந்தமையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாறான நிதிஏற்பாட்டை விஞ்சுதல் எதிர்காலத்தில் இயலுமானவரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 வைப்பு மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,995,988 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது STS Forum இற்காக ஏற்பட்ட தொகையாக இருந்ததுடன் இத்தொகையைச் செலுத்துவதற்காக தேவையான |

| | | |
|---|---|---|
| | | கூட்டத் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் விரைவாக இந்தத் தொகையைச் செலுத்தி முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் இலக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 267 விதாதா நிலையங்கள் ஊடாக கிராமத்திற்கு தொழில்நுட்பம், பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையே விஞ்ஞானத்தை மேம்படுத்துதல் விதாதா நிலையங்களின் நோக்கமாக இருந்த போதிலும், சகல நிலையங்களுக்கும் பராம்பரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | பாரம்பரிய முறைகளுக்கு தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்துதல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சகல விதாதா நிலையங்களிலும் நடாத்துதல் வேண்டும். | விதாதா வள நிலைங்களிலிருந்து பிரதேசத்தின் மக்களின் கோரிக்கையின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் என்பன ஒழுங்கமைக்கப்படுதலும் மேற்கொள்ளப்படாமையால் முதலாவது அந்த கோரிக்கைக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே புதிய தொழில்நுட்ப பயிற்சியாக நடத்தப்படும் தொழிற்படு உற்பத்தி, கணனி வன்பொருள் கூட்டிணைப்பு மற்றும் பழுதுகளைத் திருத்துதல், இரசாயன பொருள் சார்ந்த உற்பத்தி, தாவரச்சாறு சார்ந்த உற்பத்தி நெனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருந்தன. |

### 3.2 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் செயலாற்றல் தொடர்பான திட்டங்களின் பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்களின் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் திட்டம் (Activity plan) அமுல்படுத்தப்படும் கால அட்டவணை (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்த்த விளைவுகள் (Output) என்பன மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம், அமுல்படுத்தப்பட வேண்டிய கால அட்டவணை, அந்த செயற்பாடுகளில் எதிர்பார்த்த பூர்த்தி மற்றும் விளைவுகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட வில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட வில்லை. |

### 3.3 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சோலா பெனல் செயற்திட்டத்தின் வலயமாக தெரிவு செய்யப்பட்ட 100 ஆசிரியர்களுக்காக | திட்டமிடப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய திட்டங்கள் | சோலா பெனல் செயற்திட்டத்தின் வலயமாக 100 ஆசிரியர்களுக்காக நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் அதில் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்படவில்லை. | மற்றும் கால அட்டவணை என்பன சரியாக திட்டமிடப்பட வேண்டும். | தேவையான ஆசிரியர்களின் பெயர்பட்டியல் இதுவரையிலும் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படாமையினால் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்த முடியாதிருந்தது. |
| (ஆ) | சோலா பெனல் செயற்திட்டத்திற்காக தொழில்நுட்பக் கல்லூரிகளில் 250 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அதில் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் இதுவரையிலும் நடாத்தப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய நடவடிக்கைகள் மற்றும் கால அட்டவணை என்பன சரியாகத் திட்டமிடப்பட வேண்டும். | இந்த நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | தேசிய விஞ்ஞான நிலையத்தில் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதன் ஆரம்ப செயற்பாடுகளான திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் காணி கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை. | வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை வினைத்திறனானதாக பயன்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஈ) | இனவிருத்தி விஞ்ஞானம் தொடர்பான பகுப்பாய்வு நிலையமொன்றை தாபிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்படவில்லை. | முன்னைய ஆண்டின் போது மதிப்பீடு ஒதுக்கப்பட்ட செயற்திட்டமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும், ரூபா 50 மில்லியன் ஒதுக்கப் பட்டிருந்ததுடன் மதிப்பீடு தயாரிக்கும் போது கவனமாக | சுகாதார அமைச்சுடன் ஒன்றிணைந்து அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், சுகாதார அமைச்சின் பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நியமங்கள் நிறுவகத்திற்கு ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 44 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. பெறுகை நடவடிக்கைகளுக்காக நீண்டகாலமொன்று எடுத்தமை இதற்கு காரணமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டம் பாதீட்டு முன்மொழிவுகளில் உத்தேசிக்கப்பட்ட ஒன்றாக இருந்தமையால் திட்டத்தின் பிரகாரம் செயற்பட முடியாமை இந்த தாமதத்திற்கு பிரதான காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பாதீட்டு முன்மொழிவொன்றான இந்த செயற்திட்டத்தின் சாத்தியவளம் மற்றும் சிக்கல்களை இனங்கண்டு அதன் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் பெற்றோலிய உற்பத்திகளை பரீட்சிப்பதற்கான வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டில் 95 சதவீதம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் திறைசேரியிலிருந்து நிதி விடுவிக்கப்படாமையினால் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இயந்திர இலக்ரோண விஞ்ஞானத்திற்கான வலுப்படுத்தும் பொருளாதார அபிவிருத்தி ஆரம்பம் (MEDI) ஊடாக உற்பத்தித் திட்டம் பொறியியல் விஞ்ஞானத்திற்காக (PDE) உதவி வழங்குதல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அவ்வாறே உள்நாட்டு மற்றும் உலக ரீதியில் அனுமதிப்பத்திரதாரர்களின் உற்பத்திக்காக தகுதியான இயந்திரம் திட்ட வடிவமைப்பு ஊடாக பொருளாதார மற்றும் அதிதொழில்நுட்ப ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்கும், இறக்குமதியைக் குறைப்பதற்கும் இந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 325 மில்லியன் தொகையான செலவின மதிப்பீடொன்று காணப்பட்டதுடன் ரூபா 250 மில்லியன் தொகையான குறைநிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பித்தமையால் மீளாய்வாண்டின் போதும் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. குறித்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை மற்றும் திட்டங்களில் காணப்பட்ட குறைபாடுகளினால் மேற்கூறப்பட்ட மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான திட்டங்கள் மற்றும் கால அட்டவணை சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஈ) | நடப்பாண்டின் போது இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் தொழில்முயற்சி வளங்களைத் திட்டமிடும் முறைமைக்காக (Enterprices Resources Planning) ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஅளவும் சேமிக்கப்பட்டிருந்தது. இதற்கு காரணமாக முகாமைத்துவ சபையினால் இந்த செயற்திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதாக | பாதீட்டு முன்மொழிவொன்றான செயற்திட்டத்தின் சாத்தியத்தன்மை மற்றும் சிக்கல்கள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பெறுகை நடைமுறையில் தொழில்நுட்ப மதிப்பீடு சிக்கலானதாக இருந்தமை மற்றும் சில சந்தர்ப்பங்களின் போது உரிய முறைமையொன்று கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தமை மற்றும் சாத்திய வளம் தொடர்பான பிரச்சினைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. அதாவது தேவையினை இனங்கண்டு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | காரணமாக செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியான 2018 பெப்ரவரி 28 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு (Verification) செய்யப்படவில்லை. | இறுதி நிதிக்கூற்றுத் திகதியான 2018 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு (Verification) செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட பொருட் பதிவேட்டு விடயங்கள் மற்றும் நிலையான சொத்துக்களான 01 கணனி, 01 சலவை இயந்திரம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை உள்ளடக்கிய 18 விடயங்கள் கணக்காய்வுத் திகதியான 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சின் நோக்கம் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் ஏனைய தரப்பினருக்கு கையளிக்கும் போது அமைச்சின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இடையூறற்ற வகையிலும், அந்த சொத்துக்களை முறையாக மீண்டும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (இ) | WPKY-8402 மற்றும் WPKN-1910 ஆம் இலக்கங்களையுடைய 02 வாகனங்கள் ஏனைய 02 அமைச்சுக்களுக்கு முறையான அங்கீகாரமின்றி விடுவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் நோக்கம் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கும் போது அமைச்சின் | WPKY-8402 என்ற அரசாங்கத்தின் உரித்தை தற்போது பயன்படுத்துகின்ற சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு கையளிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இடையூறில்லாத வகையிலும் அந்த சொத்துக்களை முறையாக கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அங்கீகரித்தைப் பெற்றுக் கொள்வதற்காக 2019 மே 07 ஆந் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. WPKU-1910 என்ற வாகனம் தற்போது வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு பயன்படுத்தப் படுவதுடன் அதனை கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மெததும்பற விதாதா நிலையத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2016 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. அவருக்கு விநியோகிக்கப்பட்ட பதிவு இலக்கம் WP -MQ-2613 என்ற மோட்டார் சைக்கிளின் பெறுமதி ரூபா 144,920 ஆனமையால் அத்தொகையை மீண்டும் அறவிடுவதற்கோ அல்லது மோட்டார் சைக்கிளை மீண்டும் அமைச்சிற்கு கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மெததும்பற விதாத்தா நிலையத்தில் திரு.கே.ஏ.ஆர் தர்மகீர்த்தி என்பவர் பதவியைக் கைவிட்டுச் சென்ற அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு 03 மாதங்களுக்கு முன் முறைப்பாடொன்றைப் பெற்றமையின் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கோ அல்லது ஓய்வுபெறச் செய்வதற்கோ தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. ஒழுக்காற்று உத்தியோகத்தரால் மீண்டும் சேவையில் அமர்த்துதல் அல்லது ஓய்வு பெறச்செய்தல் நிராகரிக்கப்படுமாயின் மோட்டார் சைக்கிள் பெறுமதியை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்படும். |
| (உ) பாததும்பற விதாத்தா நிலையத்தால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்கள் 2016 நவம்பர் 15 ஆந் திகதி முதல் சேவைக்கு அறிக்கையிடாதிருந்ததுடன் அவருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் பதிவு இலக்கம் தொடர்பான தகவல்கள் அமைச்சிற்கு சொந்தமாகக் காணப்படவில்லை. அவருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் பெறுமதி ரூபா 144,920 ஆனமையால் அத்தொகையை மீள அறவிடுவதற்கோ அல்லது மோட்டார் சைக்கிளை மீளக் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாததும்பற விதாத்தா நிலையத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.பீ.ஏ.ஜீ அம்பலத்தென்ன அவருக்கு மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியைச் செலுத்துமாறு 2017 யூலை 21, 2017 ஆகஸ்ட் 11, 2017 ஒக்தோபர் 24 மற்றும் 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்ட போதும், இதுவரையிலும் அந்த பணத்தை செலுத்துவதற்கு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்காமையினால் தற்போது சட்டமா அதிபர் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. |

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி, வருமான முத்திரை அல்லது பொருட்கள் பொறுப்பாக இருத்தல் அவ்வாறில்லையாயின் பொருட்கள் போன்வற்றை விநியோகித்தல் தொடர்பாக நிர்வாகரீதியாக பொறுப்பு வாய்ந்த அல்லது அதிகாரக் கையளித்தலின் கீழ் அந்த செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், அரசாங்கத்தின் உடன்படிக்கைகளுக்குரிய | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற, காசோலை கையொப்பமிடுகின்றவர்களிடமிருந்தும் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரத்தின் பிரகாரம் வைப்புக்கள் வைக்க வேண்டியிருந்த போதிலும், அந்த விடயங்கள் தொடர்பாக அமைச்சின் உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.

## 3.7 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| WPPG-9796 வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பான நட்டம் இதுவரையிலும் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் WPKH-4645 என்ற வாகனம் 04 மாதங்களை விஞ்சியிருந்ததுடன் இன்னும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படவில்லை. | நட்டத்தை மதிப்பீடு செய்து பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஓட்டத்திற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டுவர வேண்டியிருந்தமை அல்லது அவ்வாறில்லையாயின் விற்றுத் தீர்க்கப்பட வேண்டும். | WPKH-4645 என்ற வாகனத்தின் நட்டம் ரூபா 1,500,000 தொகைக்கு இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டு பழுது பார்க்கப்படுகின்றது. பழுதுபார்த்தலை தாமதமின்றி மேற்கொண்டு அமைச்சிற்கு மீள வழங்குவதாக உரிய நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இல. WPPG-9796 வாகனத்தின் நட்டத்தை மீண்டும் மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப் படுகின்றமையால் தாமதமின்றி வாகனத்தின் நட்டத்தை மதிப்பீடு செய்து பழுதுபார்த்தலை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | விதாத்தா வள நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல், பதவியுயர்வு வழங்குதல், சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் சேவை பிரமாணங்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்றவற்றின் காரணமாக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு விருப்பமின்மை செயலாற்றல் தொடர்பில் நேரடியாகத் தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சேவைப் பிரமாணங்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு நடைமுறைக்கான சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிலிருந்தும், அரச நிர்வாக அமைச்சிலிருந்தும் பரிந்துரைகள் கிடைத்திருந்ததுடன் உரிய திருத்தங்களுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | விதாத்தா நிலைய உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே தொழில்நுட்ப கையளித்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படாமையினால் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. | விதாத்தா நிலைய உத்தியோகத்தர் களுக்கு தொழில்நுட்ப பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் செத்சிறிபாய I ஆம் கட்ட கட்டிடத்தின் 3 ஆவது மாடியில் 2800 சதுரஅடி பகுதியொன்று 2018 யூன் 29 ஆந் திகதி முதல் 2018 ஒக்தோபர் 26 வரையான காலப்பகுதியில் | வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இளைஞர் அலுவல்கள் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அலுவலகம் மேற்கூறப்பட்ட அரசாங்க வளாகத்தில் நடாத்திச் செல்லப்பட்ட 2018 யூன் 29 ஆந் திகதி முதல் 2018 ஒக்தோபர் 26 |

| | | | |
|---|---|---|---|
| | இளைஞர் அலுவல்கள் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய வாடகையாக ரூபா 1,729,826 தொகை விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. இதுவரையிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | வரையான காலப்பகுதிக்குரிய கட்டிட வாடகை இந்த அமைச்சின் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதனால் அந்த அலுவலக வளாகத்திற்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 158,409 வீதம் 2,800 சதுர அடிக்காக ரூபா 1,729,826.28 தொகையொன்று இந்த அமைச்சிற்கு மீளளிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த அமைச்சிலிருந்து கோரப்பட்டுள்ளது. எனினும், துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் PSSD/01/Building Rent 2019.01 திகதியின்றிய கடிதம் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தும் 2009 ஆம் ஆண்டிற்காக உத்தேசிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் 2018 திசெம்பர் 21 ஆந் திகதியின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட துறைமுகங்கள், கப்பற்துறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சிற்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டமையால் அந்த அமைச்சிற்கு முன்னர் காணப்பட்ட அமைச்சிற்குரிய செலவினங்களை மீளளிப்புச் செய்யும் இயலுமை ஒன்று காணப்படவில்லை. அந்தப் பணத்தை இந்த அமைச்சிற்கு மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் அந்த அமைச்சிற்கு மீள்நினைவூட்டல் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | கியூபா உத்தியோகபூர்வ சுற்றுலா மற்றும் தெற்காசிய உத்தியோகபூர்வ சுற்றுலா என்பவற்றுக்காக | இதற்காக அமைச்சு செலவிடப்பட்ட பணத்தை | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமும் பங்குபற்றியிருந்ததுடன் அவருக்கான செலவினம் மற்றும் விமானப் பயணத் திகதிகள் மாற்றமடைந்தமைக்காக செலுத்தப்பட்ட முறையே ரூபா 379,000 மற்றும் ரூபா 12,500 தொகையை அமைச்சிற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (உ) | கோள் மண்டலத்தின் மின்சாரப்பட்டியல் தாமதமடைந்தமையின் காரணமாக, 2018 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 30,328 தொகையொன்று வட்டிப் பணமாகச் செலுத்தப்பட்டதுடன் இந்த நிலைமை தொடர்ச்சியாகக் காணப்பட்ட போதிலும், அதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நிறுவகத்தின் முகாமைத்துவ சபை காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | - மேற்படி - |
| (ஊ) | கடல்சார் ஆராய்ச்சி ஒத்துழைப்பு தொடர்பான ஐரோப்பா சங்கத்தின் பட்டப்பின்பட்ட டிப்ளோமா கற்களைப் பின்பற்றுவதற்காக (PHD) மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர. தெரிவு செய்யப்பட்ட மாணவர் சுவிட்சர்லாந்தில் ஜெனிவா நகரத்திற்குச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி மாற்றப்பட்டதனால் இலங்கை வங்கி சுற்றுலா முகவருக்கு (BOC Travels) ரூபா 81,100 தொகை திகதி மாற்றப்பட்டதன் காரணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் இதுதொடர்பாக அமைச்சு எடுக்கின்ற நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் | அமைச்சின் நிதி ஆக்கபூர்வமான பயன்படுத்தப்பட வேண்டும். | - மேற்படி - |

சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பாடல் பேணாதிருந்தமையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டத்தைத் தயாரிக்கும் போது முன் ஆயத்த செயற்பாடுகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. | இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாக கொண்டு அமைச்சின் சகல நிகழ்ச்சித்திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், அவற்றை அமுல்படுத்தும் போது இலக்கிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டதா என மதிப்பிடுவதற்கு குறித்துரைத்த தரவு முறைமை ஒன்று காணப்படாமை உண்மையாகும். அதனை சரியான பிரகாரம் தயாரிப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் மொத்தமான 126 செயற்திட்டங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மிகைப் பதவிகள் காணப்படுமாயின் திறைசேரியுடன் கலந்துரையாடி அந்தப் பதவிகளை ஒழிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது மிகைப் பதவியாயின் அவற்றை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் மாவட்ட விஞ்ஞான மற்றும் 25 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | - மேற்படி - | மாவட்ட விதாதா உத்தியோகத்தர் பதவிகள் 25 இற்காக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் உரித்தாக |

மற்றும் 13 வெளிக்கள இணைப்பாளர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் அந்த நிறுவனத்தில் விதாதா வள நிலையங்களின் வினைத்திறன் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை நேரடியாக தாக்கமளித்தமை அவதானிக்கப்பட்டது.

இருந்ததுடன் அதற்கான ஆட்சேர்ப்பு அறிவித்தல் (திட்டம்) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுதல் போன்ற திருத்தங்களுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்தத் தடவை மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அந்த அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி முதல் அமுலாகும் வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளக விண்ணப்பங்களைக் கோருவதற்கும், பெயரிடப்பட்ட நேர்முகப் பரீட்சை சபைக்கான அங்கீகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.